மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குண்டான சாதாரண செலவைத்தான் வசூலிக்கிறார்கள் என்று கருதுகிறேன். வெளியே ஒரு பாடி ஸ்கேனர் மூலம் எடுக்கவேண்டும் என்று சொன்னால் 2500 ரூபாய் வசூல் செய்கிறார்கள். ஆனால் நாம் வசூல் செய்வது 500 ரூபாய் என்று நினைக்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது ஒவ்வொரு பாடி ஸ்கேனருக்கும் 90 லட்சம் ரூபாய், 100 லட்சம் ரூபாய் என்று விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் பல இடங்களில் வைக்க முடியவில்லை என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அங்கே மருத்துவமனை மட்டும் அல்லாமல் மிகப் பெரிய மருத்துவக் கல்லூரியும் இருப்பதால் மதுரைக்கு அடுத்தபடியாக தஞ்சையில் இந்த பாடி ஸ்கேனரை அமைப்பதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள அரசு மருத்துவமனையிலேயே இன்னும் அந்த ஃபுல் பாடி ஸ்கேனர் அமைக்கப்படவில்லை. சென்னைக்கு வாங்கி வைத்ததற்குப் பிறகு தஞ்சையில் வைக்கலாம்.

இரத்த தானம் செய்பவர்களின் இரத்தத்தை பரிசோதனை செய்தல்.

9—*வினா எண். 9995) திரு கே. அன்பழகன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழக்கமாக இரத்ததானம் செய்பவர்களின் இரத்தத்தில் எய்ட்ஸ் மற்றும் தொற்று நோய்கள் இருக்கிறதா என்று கடுமையாக பரிசோதிக்க அரசு உத்திரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் அடிப்படையில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மஞ்சள் காமாலை (Hepatitis) பற்றி பி. வைரஸ் (B, Vi us) சோதனைகளை செய்யுமாறும் குறைந்தபட்சம், 10 சதம் எச்டிஎல்வி 3 (H. T. L.V. -3) வைரஸ் பற்றி குறுக்கு சரி பார்ப்பு (cross check) செய்யுமாறும், மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் செயல்படும் எல்லா மருத்துவமனையிலுள்ள குருதி வங்கி மருத்துவ அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

1987 மார்ச் 2]

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, மஞ்சள் காமாலை மட்டும் அல்லாமல் மலேரியா, இரத்த சோகை போன்ற கொடிய நோய் உள்ளவர்களிடம் கூட அவசியம் செய்ய வேண்டிய சில பரிசோதனைகளை கூடச் செய்யாமல் ரத்த சேமிப்பு வங்கிகளில் இரத்தம் எடுக்கிறார்கள். இப்படிப்பட்ட இரத்தத்தை, டெஸ்ட் இல்லாமல் எடுக்கக்கூடிய இரத்தத்தை, பயன்படுத்தும் அப்பாவிகள் பல கொடிய வியாதிகளுக்கு ஆளாகிறார்கள். இரத்த சேமிப்பு வங்கிகளில் இது போன்ற தவறுகள் நடக்காமல் அவற்றை அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இப்படி எங்கே நடக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களானால் நிச்சயமாக அந்த மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அங்கீகாரம் பெறாமல் லேப் வைத்து இருப்பவர்கள் எல்லாம் சட்ட விரோதமாக இரத்த சேமிப்பு நிலையம் வைத்து, புரோக்கர்களை வைத்து வியாபாரம் செய்கிறார்கள் அதைத் தடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அங்கீகாரம் இல்லாமல் யாரும் இரத்த சேமிப்பு நிலையம் ஓப்பன் செய்ய முடியாது. அப்படி அரசின் அங்கீகாரம் இல்லாமல் திறந்து வைத்து இருப்பார்களானால் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியும். அந்த இடத்தை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த தானம் செய்ய வரக் கூடியவர்கள் பரம ஏழைகளாக இருக்கக் கூடியவர்கள். நல்ல உணவு உண்டு வாழ முடியாத பல பேர்கள் தங்களுக்கு ஒரு நேரம் உணவும் கொஞ்சம் சுருக்கமான வருமானமும் கிடைக்கும் என்று அங்கே வருகிறார்கள். அதனால் அவர்களுடைய இரத்தத்தை கண்காணித்து சரியாகப் பரிசோதிக்க வேண்டியது அவசியம். இந்த இரத்தம் நல்லதா இல்லையா என்று பார்க்க வேண்டும். . . . (மணியடிக்கப் பெற்றது).

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்— விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. கு. ரமணி : அது நடக்கிறதுஎன்று நினைக்கிறேன். சில தொண்டு ஸ்தாபனங்கள், பொது ஜன சேவா ஸ்தாபனங்கள் 50, 100 பேர்கள் ஒட்டு மொத்தமாக எந்த வெகுமதியும் பெறாமல் கொடுக்கக் கூடிய ரத்த தானத்தை ஒரே சமயத்தில் எடுத்து சேமிக்க வசதிகள் இல்லை என்று சொல்கிறார்கள். உதாரணமாக கோவை சி. எம். சி. மருத்துவமனையில் 15 நாட்களுக்குள் உபயோகப்படுத்தக் கூடிய அளவில் தான் இரத்தத்தை எடுத்து வைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு மேலும் சேமித்து வைக்க வேண்டிய வசதிகளை உடனடியாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற சிரமம் இருக்கிறது என்பதை உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் பொதுவாக சென்னையிலே ஒரு இரத்த சேமிப்புக் கிடங்கை வைக்கலாம் என்ற யோசனையை தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மருத்துவ மனையில் மட்டுமல்லாமல், அரசாங்கமே பொதுவாக இரத்த சேமிப்பு வங்கி வைக்கலாம் என்று பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. சென்னையிலே வெற்றி பெற்றால், கோவையிலே திறப்பதற்கு உத்தேசிக்கலாம்.

தமிழகக் கடலோரச் சாலையை நீரோடி வரையிலும் நீட்டித்தல்.

10—(*வினா எண், 75997) திரு. ஹே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நிர்மாணப்பணி ஆரம்பித்துள்ள கடலோரச் சாலையினை தமிழ் நாட்டின் கடலோர எல்லையான நீரோடி வரையிலும் அமைக்கும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்படும் சாலைப் பணியை மேற்கொள்ள வேண்டுமாயின் சில இடங்களில் சாலையில் உள்ள பகுதிகளை உயர்த்தியும், சிறு பாலங்களை அகலப்படுத்தவும், புதுப்பிக்கவும் மேலும் புதிய சாலை இணைப்புகளும் புதிய பால அமைப்பும் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு சுமார் ரூ. 900.00 இலட்சம் தேவைப்படுவதால் அரசின் குறுகிய நிதி வசதி காரணமாக உடனடியாக மேற்கொள்ள இயலாது.